தினமணி

**பயனற்ற திட்டங்களால் பண விரயம்: விவசாயிகள் குற்றஞ்சாட்டு**

First Published : 10 Jul 2010 09:37:26 AM IST

Last Updated : 10 Jul 2010 06:14:23 PM IST

திருப்பூர், ஜூலை 9: விவசாயிகளுடன் கலந்தாலோசனை செய்யாமல் அதிகாரிகள் மேற்கொள்ளும் பயனற்ற திட்டங்களால் பண விரயம் ஏற்படுவதாக, திருப்பூரில் நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அதிகாரி கே.வி.முரளிதரன், வேளாண்மை துறை இணை இயக்குநர் கோபால், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் ராமமூர்த்தி முன்னிலை வகித்தனர். விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர்.

கொப்பரைத் தேங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு போதுமான வசதிகள் ஏற்படுத்திய பின்னர், நேரடியாக கொள்முதல் செய்யப்படும் என கூட்டுறவு விற்பனை இணையம் பதில் தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை உடனடியாக அமல்படுத்தி, கொள்ளை லாபம் ஈட்டும் வியாபாரிகளிடம் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம் துவக்கப்பட்ட பிறகு உடுமலையிலிருந்து பெதப்பம்பட்டி, செஞ்சேரி வழியாக திருப்பூருக்கு பஸ் இயக்கப்படுகிறது. அந்த பஸ் சிக்கனூத்து கிராம த்திலிருந்து 2 கி.மீ., தொலைவிலுள்ள சொக்கனூத்து பிரிவு வழியாகச் செல்வதால் 800க்கும் மேற்பட்ட மக்கள் சுமார் 2 கி.மீ., நடக்க வேண்டியுள்ளது. அந்தப் பஸ்ஸ்ஸ சிக்கனூத்துப் பிரிவிலிருந்து வலது புற சாலையில் சிக்கனூத்து, ஆமந்தகடவு, குப்பம்பாளையம், வெள்ளச்செட்டிபாளையம் வழியாக பெரியப்பட்டி சென்று திருப்பூர் செல்லும்படி திருப்பி விட வேண்டும்.

அமராவதி அணையில் தற்போது 50 அடிக்கும் கீழே தண்ணீர் குறைந்துள்ளதால் தாராபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடுமையாக குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப் பிரச்னைக்கு தீர்வு ஏற்படுத்துவதுடன், விவசாயிகளுடன் அதிகாரிகள் கலந்து பேசாமல் பல்வேறு பயனற்ற திட்டங்களை செயல்படுத்துவதால் பண விரயம் ஏற்படுகிறது. விவசாயிகளின் நலன்கருதி திட்டங்களை செயல்படுத்தும் முன்னர் விவசாயிகளுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டும்.

மேலும், சின்ன முத்தூர் குளம் குப்பை, கழிவால் மாசுபட்டுள்ளது. குளத்தை தூய்மைப்படுத்தி சுற்றிலும் கம்பி வேலி அமைக்க வேண்டும். தாராபுரம் பகுதிகளிலுள்ள நெல் பண்ணைகளில், நெல் விதைகள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதை தடுக்க வேண்டும்.
திருப்பூர் தெற்கு உழவர் சந்தைக்குள் இரவு நேரங்களில் காய்கறிகள் கொண்டு வரும் ஆண் விவசாயிகளையும் தங்க அனுமதிக்க வேண்டும். அமராவதி பிரதான வாய்க்காலில் இருந்து சின்னக்காம்பாளையம் பேரூராட்சி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் கிளை வாய்க்கால் பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் உள்ளது. இதனால், அக் கிராமங்களிலுள்ள சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்வதில் தடை ஏற்பட்டுள்ளது. வாய்க்காலை தூர் வாரி, தடுப்பணைகளையும் சீரமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை விடுத்தனர்.
இப் பிரச்னைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுப்பதாக ஆட்சியர் உறுதியளித்தார்.

**அரசு வேளாண் இணையதளத்தில் விவசாயிகளின் விவரம் பதிவு**

First Published : 10 Jul 2010 09:05:36 AM IST

Last Updated : 10 Jul 2010 06:11:09 PM IST

திண்டுக்கல், ஜூலை 9:வேளாண் இணையதளத்தில் விவசாயிகளின் பெயர், முகவரி, சாகுபடி செய்யும் பயிர்கள் மற்றும் பரப்பு உள்ளிட்ட விவரங்கள் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம்:

பிற துறைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதைப் போல, வேளாண்மைத் துறையும் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் இணையதளத்தில் விவசாய விவரங்களைப் பதிவு செய்து வருகிறது.

இதில் மழை விவரம், இயற்கை சீற்றம், அலுவலகப் புள்ளிவிவரங்கள் போன்றவற்றைத் தயார் செய்து செயல்படுத்தி வருகிறது. இத்துடன் இவ்வாண்டு முதல் வட்டார அளவில் விவசாயம் செய்யும் விவசாயிகளைப் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேகரித்து வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கள அலுவலர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளின் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு விவசாயியின் பெயர், முகவரி, சாகுபடி செய்யும் பயிர்கள் மற்றும் பரப்பு, வயது, தொடர்புகொள்ள வேண்டிய முகவரி, தொலைபேசி எண், மண் வகை, விவசாயிகளின் வங்கிக் கணக்கு விவரங்கள், புலஎண், மின் மோட்டார் விவரம், நஞ்சை, புஞ்சை விவரம், சாகுபடி பரப்பு விவரம், கிணறு, தங்களிடம் இருக்கும் வேளாண் கருவி

பற்றிய விவரம் உள்ளிட்ட விவசாயம் தொடர்புடைய அனைத்து புள்ளிவிவரங்கள் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தப் புள்ளிவிவரங்கள் வேளாண்மைத் துறையின் கணினி இணையதளத்தில் பதியப்படுவதால், இதனடிப்படையில் மானியங்களோ, வேறு ஏனைய திட்டங்களோ செயல்படுத்தப்படும்போது பயன்படுத்த ஏதுவாகும் நிலை இதன் மூலம் உருவாகும்.

ஒவ்வொருவருக்கும் குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) பதிவு செய்யப்படுகிறதே, அதே போல விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இப் பதிவு அவசியமாகும்.

இப் பணியில் வடமதுரை கள அலுவலர்கள் சுமார் 11 ஆயிரம் பண்ணைக் குடும்பங்கள் பற்றிய புள்ளிவிவரங்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்வமுள்ள விவசாயிகள் தங்களைப் பற்றிய பதிவு விவரங்களை வட்டார வேளாண்மை விரிவாக்க மைய வடமதுரை கள அலுவலர்கள் மூலம் தொடர்புகொண்டால் அரசு வேளாண் இணைய தளத்தில் பதிவு செய்யப்படும் என வடமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**நாட்டின் வளம் விவசாயிகள் கையில்**

First Published : 10 Jul 2010 10:57:59 AM IST

ஆலங்குடி, ஜூலை 9: ஒரு நாட்டின் வளமும் வளர்ச்சியும் பாதுகாப்பும் விவசாயிகள் கையில்தான் உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் விதைப் பண்ணையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழாண்டு காரிப் பருவத்துக்கான முன்பருவப் பயிற்சியைத் தொடக்கிவைத்து, விவசாயிகளுக்கு இடுபொருள்களை வழங்கி அவர் பேசியது:

""தமிழகமே புதுக்கோட்டையைப் பயறு வகைக் களஞ்சியமாகப் போற்றுகிறது. ஆனால், இங்குள்ள விவசாயிகளின் தேவைக்கு அண்டை மாநிலங்களில் இருந்து விதைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்நிலை மாற வேண்டும்.

அதற்கு, நமக்குத் தேவையான, தரமான விதைகளை நாமே உற்பத்திசெய்ய வேண்டும்.

தொழில்நுட்பத்துக்காகக்கூட நாடுகள் கையேந்தலாம். ஆனால், வயிற்றுப் பசி நீங்க கையேந்தக் கூடாது. அப்படியொரு நிலையேற்படுமேயானால், அந்நாட்டின் வளர்ச்சியில் மட்டுமின்றி ஒட்டுமொத்தப் பாதுகாப்புமே கேள்விக்குறியாகிவிடும். அத்தகைய சந்தர்ப்பத்தில்தான் அன்னியர்களின் ஆதிக்கம் அதிகமாகிவிடுகிறது. இத்தகைய நிலைக்கு நம் நாடு தள்ளப்படாமல் இருக்க விவசாயிகள்தான் முக்கியப் பங்காற்ற வேண்டும்'' என்றார் சுகந்தி.

மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் எம். பழனிவேலு, விதைச் சான்று உதவி இயக்குநர் நா. அண்ணாமலை, தேசியப் பயறுவகை ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் எம். சுந்தர்

உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக, வேளாண் இணை இயக்குநர் பி. ராஜு வரவேற்றார். நிறைவில், திருவரங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் என். சகாபுதீன் நன்றி கூறினார்.

**பாசனத்துக்கு கெலவரப்பள்ளி அணை திறப்பு**

First Published : 10 Jul 2010 10:43:46 AM IST

ஒசூர், ஜூலை 9: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கெலவரப்பள்ளி அணை முதல்போக பாசனத்துக்காக வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் வீ.அருண்ராய், கிருஷ்ணகிரி எம்பி இ.ஜி. சுகவனம், ஒசூர் எம்எல்ஏ கே.கோபிநாத் ஆகியோர் அணையை திறந்து வைத்தனர். விழாவில் ஆட்சியர் பேசியது:

ஜூலை 9 (வெள்ளிக்கிழமை) முதல் டிசம்பர் 5-ம் தேதி வரை வரை 150 நாள்கள் தண்ணீர் திறந்து விடப்படும். கெலவரப்பள்ளி இடதுபுறகால்வாய் மூலம் 5,918 ஏக்கர், வலதுபுற பிரதான கால்வாய்மூலம் 2,082 ஏக்கர் என மொத்தம் 8,000 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன்பெரும்.

இதன் மூலம் தட்டுகானப்பள்ளி, பூதிநத்தம், முத்தாளி, காமன்தொட்டி, தொரப்பள்ளி, தின்னூர், கோனேரிப்பள்ளி, சென்னத்தூர், நல்லகானதொக்கப்பள்ளி உள்ளிட்ட 22 கிராம விவசாயிகள் பயன்பெறுவார்கள். முதல் 10 நாள்கள் தண்ணீர் திறந்து விடப்படும், அடுத்த 6 நாள்கள் நிறுத்தப்படும் என்றார்.

ஒசூர் நகரச் செயலாளர் வீ.விஜயகுமார், நகர்மன்றத் துணைத் தலைவர் என்.எஸ். மாதேஸ்வரன், ஒசூர் ஒன்றியச் செயலாளர் எம்.கிருஷ்ணன், மக்கள் தொடர்பு அலுவலர் தா.மனோகரன், வட்டாட்சியர் மாணிக்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தொண்டி பகுதியில் இறால் வரத்து அதிகம்**

First Published : 10 Jul 2010 09:29:23 AM IST

திருவாடானை, ஜூலை 9: திருவாடானை தாலுகா, தொண்டி கடற்கரைப் பகுதியில் இறால் வரத்து அதிகம் உள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருவாடானை தாலுகா தொண்டி, நம்புதாளை, சோழியக்குடி, முள்ளிமுனை, காரங்காடு கடற்கரைப் பகுதியில் சில மாதங்களாக வெயில் அதிகமாக இருந்தநிலையில், கடந்த 2 நாள்களாக சீதோஷ்ண நிலை மாறி, குளிர்ந்த காற்று வீசுவதாலும், வானம் மேக மூட்டத்துடன் காணப்படுவதாலும் கடல் குளிர்ச்சியடைந்து ஆழ்கடலில் உள்ள இறால்கள் மேல் பகுதிக்கு வருவதால், வரத்து அதிகம் உள்ளது. இதனால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இங்கு பிடிக்கப்படும் இறால் பதப்படுத்தப்பட்டு, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதால் அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்படுகிறது என மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

தினமலர்

**தென்னையில் காய் பிடிப்பு இல்லை தட்டுப்பாட்டால் இளநீர் விலை உயர்வு**

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில் வறட்சி எதிரொலியாக தென்னையில் காய் பிடிப்பு இல்லாததால், இளநீர் விலை அதிகரித்துள்ளது.சேலம் பனமரத்துப்பட்டி பகுதியில் குறைந்த பராமரிப்பு செலவில் நீண்ட ஆண்டுக்கு பலன் அளிப்பதால், தென்னை மரங்களை விவசாயிகள் பயிரிட்டு பராமரித்து வருகின்றனர். முதிர்ந்த தேங்காய் விற்பனையை விட இளநீர் விற்பனையில் விவசாயிகளுக்கு வருமானம் கிடைத்து வந்தது.வறட்சியால் தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி வாடின. தென்னை மட்டைகள் சரிந்து மரம் மொட்டையாகி செத்து மடிந்தன.குள்ளப்பநாயக்கனூர், குரால்நத்தம், மல்லூர், திப்பம்பட்டி, பனமரத்துப்பட்டி, கோம்பைக்காடு உள்ளிட்ட பகுதியில் தென்னை மரங்கள் செத்து மடிந்தன. கடும் வறட்சியால் தென்னை மரங்கள், காய் பிடிப்பு இன்றி வெறும் மரமாக காட்சியளிக்கிறது. அதனால், இளநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விலை அதிகரித்துள்ளது.இது குறித்து இளநீர் வியாபாரி ராஜா கூறியதாவது: கடந்த ஆண்டு விவசாயிகள் மரத்தில் இருக்கும் ஒரு இளநீர் 2.50 ரூபாய்க்கு கொடுத்தனர். டவுன் பகுதியில் ஒரு இளநீர் ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது கடும் வறட்சியால் தென்னை மரம் காய் பிடிப்பு இன்றி இருப்பதால், இளநீருக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இரண்டு மாதமாக இளநீர் கிடைக்காததால், வியாபாரத்திற்கு செல்லவில்லை. தண்ணீர் வசதி உள்ள ஒரு சில இடங்களில் இளநீர் உள்ளது. அப்பகுதி விவசாயிகள் ஒரு இளநீர் ஐந்து முதல் ஏழு ரூபாய்க்கு எங்களுக்கு கொடுக்கின்றனர். அதை டவுன் பகுதிக்கு கொண்டு வந்து பத்து ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம், என்றார்.

**காலிங்கராயன் கால்வாய்க்கு நாளை நீர் திறப்பு**

ஈரோடு: பவானிசாகர் அணையில் இருந்து காலிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு பூமிகளுக்கு, முதல் போக பாசனத்துக்காக, நாளை முதல் நவம்பர் 15ம் தேதி வரை பாசனத்துக்கு நீர் திறந்து விடப்படவுள்ளது. விவசாயிகள் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தி அரசுக்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என கலெக்டர் சுடலைக்கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

**ஒரு ஹெக்டேர் துல்லிய பண்ணையம் அமைக்க ரூ.18 ஆயிரம் மானியம் வழங்கல்**

நாமக்கல்: "நாமக்கல் வட்டாரத்தில் ஒரு ஹெக்டேர் பரப்பளவில் துல்லிய பண்ணையம் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 18,700 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படுகிறது' என, வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வட்டாரத்தில் வேளாண்மை பயிர்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு துல்லியப் பண்ணையம் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 18,700 ரூபாய் வீதம் மானியம் அளிக்கப்படும். மானியம் பெற விரும்பும் விவசாயிகள் நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மைய களப்பணியாளர்களை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து விலைப்பட்டியல் பெற்று விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. துல்லிய பண்ணையம் அமைக்க விருப்பம் உள்ள விசாயிகள் 2. 5 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் செய்திருந்தால் மட்டுமே முழு மானியம் அளிக்கப்படும்.அதற்கு வி.ஏ.ஓ.,க்களிடம் சிட்டா அடங்கல், நிலத்தின் எப்.எம்.பி., சிறு விவசாயி என சான்று, போட்டோ போன்ற ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்துடன் பெயரை பதிந்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தக்காளி தரம் பிரித்து கேரளாவுக்கு அனுப்பும் பணி தீவிரம்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதிக்கு, கர்நாடகா மாநிலத்திலிருந்து கொண்டு வரப்படும் தக்காளி தரம் பிரித்து கேரளா பகுதிகளுக்கு அனுப்பும் பணி தீவிரமாகியுள்ளது. பொள்ளாச்சி சந்தைக்கு, உடுமலை, முக்கோணம், பூலாங்கிணறு, வடக்கி பாளையம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து நாட்டு தக்காளியும், கர்நாடகா பகுதியிலிருந்து "ஹைபீரிட்' தக்காளியும் வரத்துள்ளது. வெளி மாநிலங்களிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு கொண்டு வரப்படும் தக்காளி தரம் பிரிக்கப்பட்டு பெட்டிகளில் அடைத்து கேரளாவுக்கு அனுப்புவது வழக்கம். இங்கு வரும் காய்கறிகளில், கேரள மாநிலத்திற்கு 75 சதவீதம் அனுப்பப்படுகிறது. இதுதவிர, ஒட்டன்சத்திரம் உட்பட பிற பகுதிகளிலிருந்து பொள்ளாச்சி வழியாகவே கேரளாவுக்கு தக்காளி கொண்டு செல்லப்படும். தற்போது, கர்நாடகா மாநிலம் பெங்களூரு, மைசூரு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு தக்காளி வரத்துள்ளது. உள்ளூர் பகுதியில், பருவம் தவறிய மழையால் தக்காளி சாகுபடி குறைந்துள்ளது.

உள்ளூர் பகுதியிலிருந்து இரண்டு டன் வரையிலும், வெளி மாநிலத்திலிருந்து நான்கு டன் வரையிலும் தக்காளி வரத்துள்ளது. சந்தைக்கு வரும் தக்காளியில், 70 சதவீதம் கேரளப்பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது, வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்து

வருகிறது. பொள்ளாச்சி, வடக்கி பாளையத்தில், "ஹைபீரிட்' தக்காளி தரம் பிரிக்க பட்டு பெட்டிகளில் அடைத்து கேரளாவுக்கு அனுப்பும் பணி தீவிரமாக நடக்கிறது. வியாபாரிகள் கூறியதாவது:கர்நாடகா பகுதியிலிருந்து கொண்டு வரப்படும் தக்காளி தரம் பிரித்து, கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. தற்போது சீசன் இல்லாததால், வரத்து குறைந்துள்ளது. இதனால், விலை உயர்ந்துள்ளது. இரு மாதங்களுக்கு முன் கிலோ 16 ரூபாய்க்கு விற்ற தக்காளி தற்போது கிலோ 38 ரூபாய் வரையிலும் விற்கிறது. 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி 350 ரூபாய் வரையிலும் விலை வைத்து விற்பனையாகிறது. இருப்பினும், கேரளாவில் தக்காளிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. பொள்ளாச்சி வரும் தக்காளியில், 70 சதவீதம் அனுப்பப்படுகிறது. மீதமுள்ள தக்காளி, சுற்றிப்பகுதிகளுக்கு விற்பனைக் காக அனுப்பப்படுகிறது. வரும் மாதங்களில் வரத்து குறைந்தால், விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பயிர் புத்தூட்டம்' செய்முறை பயிற்சி**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி அடுத்த வடக்கிபாளையம் பிரிவில், வேளாண் புள்ளியியல் துறை சார்பில் "பயிர் புத்தூட்டம்' குறித்த செய்முறை பயிற்சி முகாம் நடந்தது. கோவை மாவட்ட வேளாண் புள்ளியியல் துறை சார்பில் தேசிய வேளாண்மை காப்பீடு திட்டம் மற்றும் பயிர் மதிப்பீட்டு ஆய்வின் கீழ் வேளாண் துறை அதிகாரிகளுக்கு "பயிர் புத்தூட்டம்' குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் பொள்ளாச்சியில் நடந்தது.முதல் நாள் பயிற்சி முகாமில், பயிர்களை தேர்வு செய்வது, மகசூல் கணக்கிடுவது ஆகியவை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. இதையடுத்து, இரண்டாம் நாளான நேற்று பொள்ளாச்சி அடுத்த வடக்கிபாளையம் பிரிவு அருகே செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.கோட்ட புள்ளியியல் துறை ஆய்வாளர் கோவிந்தராஜ், உதவி அலுவலர்கள் ராமதாஸ், கனகராஜ் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**பெரியாறு அணை அருகே புதிய அணை வரைபடத்தை வெளியிட்டது கேரள அரசு**

கூடலூர் : பெரியாறு அணை அருகே கட்டுவதற்கான புதிய அணையின் வரைபடத்தை கேரள அரசு வெளியிட்டு அடுத்த கட்ட பிரச்னையை துவக்கியுள்ளது. பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்கு வரைபட அமைப்பை தயார் செய்வதற்காக கடந்த மே மாதத்தில் கேரள நீர்பாசனத்துறை இணை இயக்குநர் ராஜசேகரன் தலைமையில் ஒரு குழுவை கேரள அரசு நியமித்தது. இக்குழு புதிய அணை கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட பகுதியில் ஒரு வாரம் ஆய்வு நடத்தியது. முன்னதாக கடந்த 2008 ல் பெரியாறு அணையில் இருந்து கேரள பகுதி வழியாக நீர் வெளியேறும் ஆற்றுப் பகுதியில் சர்வே நடத்தப்பட்டது. பாறைகள் மற்றும் மண்ணின் தன்மை குறித்து இந்த ஆய்வு இருந்தது. இதனடிப்படையில் இக்குழு புதிய அணை கட்டுவதற்கான வரைபடத்தை தயார் செய்து கேரள அரசிடம் சமர்ப்பித்தது. இதில் அணையில் ஷட்டர் இல்லாமல்

ஒரு வரைபடமும், ஷட்டர் வைத்து இருப்பது போல் ஒரு வரைபடமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த வரை படத்தை நீர்வள வரைபட ஆய்வு மையம் (ஐ.டி.ஆர்.பி.,) மூலம் கேரள அரசு வெளியிட்டுள்ளது. புதிய அணைக்கான திட்டம் தயார் நிலையில் இருப்பதாகவும், விரைவில் புதிய அணை கட்டுமானப் பணிகள் துவங்க உள்ளதாகவும் கேரள நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணைப்பிரச்னை குறித்து சுப்ரீம் கோர்டில் வழக்கு விசாரணை நடந்து வருகிறது. மேலும், சுப்ரீம் கோர்ட்டால் நியமிக்கப்பட்ட ஐவர் குழு அணைப்பகுதியை ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டியுள்ளது. அதற்கு முன் பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்கான வரைபடத்தை வெளியிட்டு அடுத்தகட்ட பிரச்னையை கேரள அரசு துவக்கியுள்ளது.

**அணை நீர் மட்டம் குறைவு எளிதில் பிடிபடும் மீன்கள்**

ஆண்டிபட்டி :வைகை அணை நீர் மட் டம் குறைந்ததால் அணையின் நீர் தேக்கப்பகுதியில் மீன்கள் பிடிபடுவது அதிகரித்துள்ளது. வைகை அணையின் நீர் மட்டம் 71 அடியாக இருக்கும் போது அணையில் பத்து சதுர மைல் அளவு நீர் தேங்கி நிற்கும். ஒவ்வொரு ஆண்டும் மழை காலங்களில் நீர் மட்டம் உயரும் போது மீன் வளத்துறை மூலம் மீன் குஞ்சுகள் வளர்ப் புக்காக விடப்படும். அணையின் நீர் தேக்கப்பகுதியில் ஆண்டு முழுவதும் மீன் பிடிக்கப்பட்டு மீன் வளத்துறை மூலம் விற் பனை செய்யப்படுகிறது. கட்லா, மிருகாள், ரோகு வகை செயற்கை மீன்கள், ஜிலேபி கெண்டை, உளுவை, ஆறா வகை இயற்கை மீன்களும் அணையில் நீர் தேக்கப்பகுதியில் அதிக அளவில் உள்ளன. தற்போது அணையின் நீர் மட்டம் 24 அடியாக இருப்பதால் பிடிபடும் மீன்கள் அளவு அதிகமாக உள்ளது.

**அணைகளுக்கு நீர்வரத்து**

பழநி : கொடைக்கானல் மலையில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்துள்ளது. பாலாறு பொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 7 கன அடி நீர்வரத்தும், 23 கன அடி நீர் வெளியேற்றமும் உள்ளது. நேற்றைய நீர்மட்டம் 34.15 அடி. குதிரையாறு அணைக்கு வினாடிக்கு 5 கன அடி நீர்வரத்தும், 5 கன அடி நீர்வெளியேற்றப்படுகிறது. நேற்றைய நீர்மட்டம் 45 அடி.

**சிறுமலையில் மூலிகை தோட்டம் விவசாய அதிகாரிகள் இடம் தேர்வு**

திண்டுக்கல் : சிறுமலைப்பகுதியில் பாரம்பரிய மூலிகை தோட்டம் அமைப்பதற்கான இடத்தை விவசாயத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.திண்டுக்கல் சிறுமலைப்பகுதி 33 கி.மீ., தூரத்திற்கு கடல் மட்டத்திலிருந்து 1000 முதல் 1600 மீட்டர் உயரத்தில் அமைந் துள்ளது.இங்கு பாரம்பரியமிக்க மூலிகை தோட்டம் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கான இடத்தை

விவசாயத்துறை செயலாளர் நந்தாகி÷ஷார், விவசாயத்துறை கமிஷனர் கோசலராமன் ஆகியோர் ஆய்வு செய்தனர். சிறுமலை தென்பகுதி போக்குவரத்திற்கு ஏற்றதாகவும்,சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருப்பதால் இங்கு மூலிகை தோட்டம் மற் றும் பூங்கா அமைப்பதற் கான இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கை விரைவில் முதல் வர் கருணாநிதியிடம் தாக் கல் செய்ய உள்ளதாகவும் தெரிவித்தனர். கலெக்டர் வள்ளலார், தோட்டக் கலை துணை இயக்குனர் கணேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கரீப் பருவ பயிர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம்**

வடமதுரை : தேசிய வேளாண்மை பயிர் இன்சூரன்ஸ் திட்டத் தில் இவ்வாண்டு கரீப் பருவ பயிர்களான முதல் மற்றும் இரண்டாம் போக நெல் சாகுபடி, மக்காச் சோளம், கடலை ஆகிய பயிர்களுக்கு செயல்படுத்த அரசு அனுமதித்துள்ளது. வடமதுரை வட்டாரத்தில் வடமதுரை, அய்யலூர் இரண்டு பிர்க்காக்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கடன் பெறும், பெறாத விவசாயிகள் அனைவரும் இன்சூரன்ஸ் திட்டத்தில் பங்கு பெறலாம். முதல் போக நெல் சாகுபடிக்கு விதைப்பு காலமாக ஜூலை 31 வரையும், பிரிமியம்(ஏக்கருக்கு ரூ.242) செலுத்த செப்.30 கடைசி நாளாகவும்,இரண்டாம் போக நெல்லுக்கு டிசம்பர் 3 1வரை விதைப்பு காலமாகவும், பிரிமியம் (ரூ.130) செலுத்த பிப்.28 கடைசி நாளாகவும், மக்காச் சோளம் (பிரிமியம் ஏக்கருக்கு ரூ.61), கடலை(ஏக்கருக்கு ரூ.170) சாகுபடிக்கு விதைப்பு காலம் செப்.30 வரையும், பிரிமியம் செலு த்த நவ.30 கடைசி நாளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள் ளது. வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயனடைலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**தயாராகுது 7,500 மலர் தொட்டிகள் 2வது சீசனுக்கான பணிகள் "ஜரூர்'**

ஊட்டி: இரண்டாவது சீசனுக்காக, ஊட்டி தாவரவியல் பூங்காவில், 7,500 மலர் தொட்டிகள் வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஊட்டியில், கோடை விழா நிறைவு பெற்று குறைந்த கூட்டம், கோவையில் நடத்தப்பட்ட உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு அதிகரித்தது. தற்போது, வார இறுதி நாட்களில் கேரளா, கர்னாடக மாநில சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் ஓரளவு அதிகரிக்கிறது. 2வது சீசனுக்கான பணிகள், பூங்காக்களில் நடத்தப்பட்டு வருகின்றன. ஊட்டி தாவரவியல் பூங்காவில், கோடை சீசனுக்காக நடவு செய்யப்பட்ட பல மலர் நாற்றுகள் அகற்றப்பட்டு, புதிய நாற்றுகள் நடப்படும் பணிகள் மும்முரமாக உள்ளது. மலர் கண்காட்சிக்காக வைக்கப்பட்ட 15 ஆயிரம் மலர் தொட்டிகளில், 2வது சீசனுக்காக மட்டும் 7,500 மலர் தொட்டிகள் வைக்கவும், இத்தாலியன் பூங்கா, தாவரவியல் பூங்காவின் முகப்பு பகுதிகளில், புதிய மலர் நாற்றுகளை நடவு செய்யவும், பூங்கா நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. பூங்கா மேலாளர் பிரகாசம் தலைமையில், பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஊட்டியில் உள்ள ரோஜாப் பூங்கா,

தொட்டபெட்டா, படகு இல்லம், புதிய படகு இல்லம் உட்பட சாலையோரப் பூங்காக்களிலும், தனியார் சார்பில் பராமரிக்கப்படும் பட்டாம் பூச்சி பூங்கா, டேவிஸ் பூங்காக்களிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திசு வளர்ப்பு முறையில் திருப்பூரிலும் பேரீச்சை சாகுபடி**

திருப்பூர்: திசு வளர்ப்பு முறையில் ருசிமிக்க பேரீச்சைகளை, திருப்பூர் சுற்றுப்பகுதியிலும் சாகுபடி செய்ய முடியும் என விவசாயி ஒருவர் நிரூபித்துள்ளார். கலெக்டர் முன்னிலையில் மற்ற விவசாயிகளுக்கு சாகுபடி குறித்து நேற்று விளக்கினார். பேரீச்சை என்றாலே அரபு நாடுகளே நினைவுக்கு வரும்; பாலைவனமே பேரீச்சை சாகுபடிக்கு ஏற்றது என்ற கருத்தும் பொதுமக்களிடையே உள்ளது.

ஆனால், திசு வளர்ப்பு முறையிலான நாற்றுகளை நடவு செய்தால், நமது பகுதியிலும் பேரீச்சை சாகுபடி மூலம் லாபம் கொழிக்கலாம் என, திருப்பூர் வஞ்சிபாளையத்தைச் சேர்ந்த விவசாயி முருகவேல் நிரூபித்துள்ளார். திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் கூட்டத்தில் பேரீச்சை சாகுபடி குறித்து, இதர விவசாயிகளுக்கு முருகவேல் விளக்கினார்.அவர் கூறியதாவது:திருப்பூர், வஞ்சிபாளையத்தில் இரண்டரை ஏக்கர் பரப்பில் பேரீச்சை சாகுபடி செய்துள்ளேன்.

பேரீச்சையில் 3,000 ரகங்கள் உள்ளன. நான், சாகுபடி செய்துள்ளது பரி (ஆச்ணூஹுஜ) ரகம். இது, மற்ற பழங்களைப் போல் கறுப்பு நிறத்தில் அல்லாமல், வெளிர் பச்சையும், மஞ்சளும் கலந்த நிறத்தில் இருக்கும். மிகவும் சுவையாக இருப்பதால், பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. இதற்கான நாற்றுகள் லண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டன. ஒரு நாற்று 3,500 ரூபாய் ஆகிறது. ஏக்கருக்கு 70 கன்றுகள் நடலாம்.

நல்ல தண்ணீர் வசதியுள்ள இடத்தில் பலனளிக்கும். பேரீச்சை என்பதால், வறண்ட நிலமே போதுமானது என்பது தவறான கருத்து. மூன்றாண்டுகளில் பலன் தரத்துவங்கு கிறது. முதல் அறுவடையில் 30 கிலோ எடுக்கலாம். பின், 300 கிலோ வரை அறுவடை செய்யலாம். இயற்கை உரங்களையே பயன்படுத்துகிறேன்.சர்வதேச சந்தையில் கிலோ 600 ரூபாய்க்கு போகிறது. தற்போது உள்ளூர் மார்க்கெட்டில் நல்ல தேவை உள்ளது. இருப்பினும் 300 ரூபாய்க்கு விற்பனை செய்யலாம். தமிழகத்தில் திண்டுக்கல்லில் ஒரு விவசாயி சாகுபடி செய்துள்ளார்.இவ்வாறு, முருகவேல் தெரிவித்தார்.

**அமராவதி அணை பாசனத்திற்கு திறப்பு**

உடுமலை: உடுமலை அமராவதி அணையில் இருந்து குறுவை நெல் சாகுபடிக்கு நேற்று காலை பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. உடுமலை அருகேயுள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களுக்குட்பட்ட 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. வழக்கமாக அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஜூன் 1ம் தேதி முதலும், புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆகஸ்ட் முதல் தேதியில் இருந்தும் தண்ணீர் திறக்கப்படும். கடந்தாண்டு இறுதியில் அணை நீர்மட்டம் அதலபாதாளத்தில் இருந்ததோடு, தென்மேற்கு பருவ மழையும் தாமதமானதால் அணை நீர்மட்டம் உயரவில்லை. இதனால், தண்ணீர் திறப்பு இழுபறியாகி வந்தது.

இந்நிலையில், கடந்த மாதம் பெய்த பருவ மழை காரணமாக அணை நீர் மட்டம் உயர்ந்ததால், குறுவை நெல் சாகுபடிக்கு உடனடியாக பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகள் கோரிக்கையை ஏற்று தண்ணீர் திறந்துவிட நேற்று அரசு உத்தரவிட்டது. இதனையடுத்து, நேற்று காலை 7.00 மணி முதல் அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்காக அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம், உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவில் உள்ள 7,520 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்.

"அணையில் இருந்து, பழைய ஆயக்கட்டு ராஜவாய்க்கால்களுக்கு வினாடிக்கு 300 கன அடி நீரும், கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால்களுக்கு தலா 25 கன அடி நீரும் திறக்கப்பட்டது. முதல்சுற்று தொடர்ந்து 21 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. பின்னர், 5 நாள் நிறுத்தம், 10 நாள் திறப்பு என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வரும் நவம்பர் 30 முடிய குறுவை நெல் சாகுபடிக்கு தண்ணீர் வழங்கப்படும்' என அதிகாரிகள் தெரிவித்தனர்.அணை நிலவரம்: நேற்று காலை நிலவரப்படி அமராவதி அணை நீர் மட்டம் மொத்தமுள்ள 90 அடியில் 54.05 அடியாகவும், நீர் இருப்பு 1,384.3 மில்லியன் கன அடியாகவும் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 265 கன அடி நீர் வரத்து இருந்தது.

**தொடர்ந்து ஏழாவது மாதமாக சரிவு சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 5% குறைந்தது**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
சென்ற ஜூன் மாதத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 5 சதவீதம் குறைந்துள்ளது. தொடர்ந்து ஏழாவது மாதமாக சோயா புண்ணாக்கு ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது.
2009–ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், சுமார் 1.01 லட்சம் டன் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, நடப்பாண்டு ஜூன் மாதத்தில் 95,778 டன்னாக குறைந்துள்ளது என சோயாபீன் பதப்படுத்துவோர் சங்கம் (சோபா) தெரிவித்துள்ளது.
கால்நடை தீவனம்
சோயா புண்ணாக்கு கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. சோயாபீன் அரவைப் பணிகள் குறைந்ததால், சென்ற ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து சோயா புண்ணாக்கு ஏற்றுமதியில் பின்னடைவு ஏற்படத் தொடங்கியது.
மேலும், அமெரிக்க நாட்டின் சோயா புண்ணாக்குவிலையுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் இதன் விலை அதிகமாக உள்ளது. எனவே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நம் நாட்டு சோயா புண்ணாக்கிற்கு தேவைப்பாடு குறைந்து போயுள்ளது. இந்த நாடுகள் தென் அமெரிக்காவிலிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்து வருகின்றன. இதுவும், நம் நாட்டின் ஏற்றுமதியில் சரிவை ஏற்படுத்தியுள்ளது.
விலை அதிகரிப்பு
உள்நாட்டில் விலை அதிகரித்து வரும் நிலையில், சோயாபீன் போதிய அளவு கிடைக்கவில்லை. எனவே அரவை ஆலைகளுக்கு சோயாபீனை வாங்குவது, அரைப்பது, எண்ணெய் மற்றும் புண்ணாக்கு எடுப்பது போன்றவை ஆதாயமளிப்பதாக இல்லை. எனவே இதன் ஏற்றுமதி சரிவடைந்துள்ளது என சோபா அமைப்பு தெரிவித்துள்ளது. மே மாதத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 32 சதவீதம் வீழ்ச்சி கண்டு 60,228 டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டு மே மாதத்தில் 89,156 டன்னாக இருந்தது.
இந்தியாவிலிருந்து சோயா புண்ணாக்கு, கடலைப் புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு, கடுகு புண்ணாக்கு ஆகியவை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அமராவதி அணையில் தண்ணீர் திறப்பு**



அமராவதி அணையின் கீழ் மதகில் இருந்து தண்ணீர் சீறி பாய்ந்து வெளியேறும் காட்சி.

மடத்துக்குளம், ஜூலை.10–
பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அமராவதி அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறந்து

*விடப்பட்டது.*

*அமராவதி அணை*

*திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் அருகே அமராவதி அணை உள்ளது. இந்த அணை மூலமாக பழைய ஆயக்கட்டு பாசனம், புதிய ஆயக்கட்டு பாசனம் மூலமாக திருப்பூர், கரூர், ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. பழைய ஆயக்கட்டு பாசனத்தின் கீழ் ராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கடத்தூர், கணியூர், காரத்தொழுவு ஆகிய 8 ராஜவாய்க்கால் மூலமாக 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு அமராவதி அணையில் இருந்து நேற்று காலை தண்ணீர் திறந்து விடப்பட்டது.*

*350 கன அடி நீர் திறப்பு*

*அணையில் ஆயிரத்து 139.05 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. அணைக்கு வினாடிக்கு 265 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணை பகுதியில் நேற்று 3 மில்லி மீட்டர் மழை பெய்தது. அணையில் இருந்து வினாடிக்கு 350 கன அடி தண்ணீர் பாசனத்துக்காக திறந்து விடப்பட்டு உள்ளது.*

*8 ராஜவாய்க்கால்களில் ராமகுளம், கல்லாபுரம் வாய்க்கால்கள் அமராவதி அணையில் இருந்து நேரடியாக தண்ணீர் பெறுகிறது. இதில் 2 வாய்க்கால்களுக்கு 50 கன அடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. மற்ற 6 ராஜவாய்க்கால்களுக்கு அமராவதி ஆற்றில் இருந்து நீர் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் அமராவதி ஆற்றுக்கு 300 கன அடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து 21 நாட்கள் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.*

*நவம்பர் மாதம் வரை*

*அதன்பின்னர் தொடர்ந்து 5 நாட்கள் தண்ணீர் திறந்து விடப்படும். பின்னர் 10 நாட்கள் தண்ணீர் நிறுத்தப்படும். இவ்வாறு சுழற்சி முறையில் வருகிற நவம்பர் மாதம் வரை பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.*

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கியது**



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக மலர்செடிகள் நடவு செய்யும் பணி நேற்று தொடங்கிய போது எடுத்த படம்.

*ஊட்டி, ஜூலை.10–*

ஊட்டி அரசு தாவர வியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கப்பட்டு உள்ளது.

கோடை சீசன்

உலக அளவில் சுற்றுலா தலமாக விளங்கும் ஊட்டிக்கு ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசனை அனுபவிக்க லட்சக்கணக்கில் சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். அப்போது அவர்களை மகிழ்விக்கும் வகையில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் பல்வேறு வகையான மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு இருந்தது.

இவைகள் கோடை சீசன் காலத்தில் அழகாக பூத்து குலுங்குகின. இவற்றை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். மேலும் சுற்றுலா பயணிகளுக்காக மே மாதம் பூங்காவில் மலர் கண்காட்சியும் நடத்தப்பட்டது. இந்த நிலையில் வருகிற அக்டோபர், நவம்பர் மாதம் ஊட்டியில் 2–வது சீசன் நிலவும். இந்த சீசனை அனுப விக்க சுற்றுலா பயணிகளும், தேனிலவு தம்பதிகளும் ஊட்டிக்கு வருவார்கள்.

எனவே ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 2–வது சீசனுக்காக மலர் செடிகள் நடவு பணி நேற்று தொடங் கியது. இதனை தோட்டக் கலைதுறை உதவி இயக்குனர் பிரகாசம் தொடங்கி வைத்தார். இந்த பணியில் பூங்கா மேலாளர்கள் ஜெயலட்சுமி, தேவன் மற்றும் பணியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். இது குறித்து உதவி இயக்குனர் பிரகாசம் நிருபர் களிடம் கூறியதாவது:–

2 லட்சம் செடிகள்

2–வது சீசனை முன்னிட்டு ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள், பள்ளி, கல்லூரி மாணவர்களை மகிழ்விக்க இந்த காலத்தில் பூக்க கூடிய பெட்டோனியா மேரி கோல்டு, காலண்டுலா லூரப்பின், கேன்டிடாப் உள்பட 40 ரக மலர்கள், 7500 மலர் தொட்டிகளிலும், 2 லட்சம் மலர் செடிகள் பூங்கா பாத்தி களில் நடவு செய்யப்படுகின் றன.

ஊட்டி மலர் கண்காட்சி தினத்தில் மலர் தொட்டிகள் அலங்காரம் அமைப்பது போன்று, இந்த ஆண்டு 2–வது சீசன் காலத்தில் 7500 மலர் தொட்டிகள் பூங்காவில் வைக் கப்படுகின்றன. தற்போது நடவு செய்யப் பட்டு உள்ள மலர் செடிகள் ஆகஸ்ட் மாதம் 2–வது வாரம் முதல் படிப்படியாக பூக்க தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு மலர் செடிகள் நடவு செய்யும் பணி ஜூலை 10–ந் தேதி (இன்று) தொடங்கும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் ஒரு நாள் முன்னதாகவே மலர் செடிகள் நடவு செய்யும் பணி தொடங்கப்பட்டு உள்ளது.

## விலை பகிர்வு திட்டத்தின்படி பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

குன்னூர், ஜூலை.10–

விலை பகிர்வு திட்டத்தின் கீழ் பச்சை தேயிலைக்கு இன்று விலை நிர்ணயம் செய்யப்படுமா? என்று விவசாயிகள் எதிர் பார்த்து உள்ளனர்.

தேயிலை விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை சாகு படியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்திய தேயிலை தொழிலை பொறுத்த வரை நீலகிரி மாவட்டத்தில் தான் அதிக அளவு சிறு விவசாயிகள் தேயிலை தொழிலில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

இதனால் நீலகிரி மாவட்ட பொருளாதாரம் தேயிலை தொழிலையே நம்பி உள்ளது. கடந்த 2000–ம் ஆண்டு முதல் தேயிலை விலை வீழ்ச்சி ஏற் பட்டது. விலை வீழ்ச்சியை சீராக்கவும், சிறு தேயிலை விவசாயிகளின் பச்சை தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கவும் தேயிலை வாரி யம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில் விலை பகிர்மான திட்டம் தேயிலை வாரியத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் 35:65 என்ற விகிதாச்சாரம் கொண்டு வரப்பட்டது.

கிராக்கி

தேயிலை ஏலத்தில் தொழிற் சாலைகளின் தேயிலை தூள் விற்பனை விலையை அடிப் படையாக கொண்டு மேற்கண்ட விகிதாச்சாரத்தின் படி விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கூறப்பட் டது. இதனை தேயிலை தொழிற்சாலைகள் குறைந்த நாட்களே அமல்படுத்தின. இந்த நிலையில் கடந்த 2008–ம் ஆண்டு தேயிலை உற் பத்தி செய்யும் உலக நாடுகளில் வறட்சி ஏற்பட்டதால் தென்னிந்திய தேயிலைக்கு கிராக்கி ஏற்பட்டது. இதனால் தேயிலை தூள் விலை உயர்ந்த தால் பச்சை தேயிலைக்கும் விலை கூடியது.

ஆலோசனை கூட்டம்

இதனால் விலை பகிர்வு திட்டம் அமல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. தற்போது தேயிலை உற்பத்தி செய்யும் கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் வறட்சி நீங்கியதால் தேயிலை உற்பத்தி அதிரித்தது. இதனால் தென்னிந்திய தேயிலைக்கு குறிப்பாக நீலகிரி தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது. விலை வீழ்ச்சியால் பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய முடியாமல் முன் பணத்தை தொழிற் சாலைகள் வழங்கி வருகின்றன. விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயி கள், தேயிலை உற்பத்தியாளர் கள் ஆகியோர் களை அழைத்து தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் விலை நிர்ணயம் குறித்து ஆலோசனை நடத்தி னார்.

எதிர்பார்ப்பு

இந்த ஆலோசனை கூட்டத் தில் விலை பகிர்மான திட்டத்தை தொழிற்சாலைகள் கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். விலை பகிர்மான திட்டத்தின் படி பச்சை தேயிலைக்கு 8 ரூபாய் வரை வழங்கப்பட வேண்டும் என்று கூறினார். தற்போது சிறு தேயிலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத விலை கிடைப்பதால் இன்று (சனிக்கிழமை) அமைச் சர் ராமச்சந்திரன், அறிவுரை படி விலை பகிர்வு திட்டத்தின் அடிப்படையில் தேயிலை தொழிற்சாலைகள் விலை நிர்ணயம் செய்வார்களா? என்ற எதிர்பார்ப்பில் சிறு விவசாயிகள் உள்ளனர்.